2012 மே 16]

236—

## பேருந்து வசதி

**வினா எண் 2566—திருமதி எஸ். கனிதா சம்பத்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுராந்தகம் தொகுதி, பெரும்பேர்கண்டிகை முதல் தாம்பரம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*பெரும்பேர்கண்டிகை கிராமம், நன்கு போக்குவரத்து வசதி பெற்றுள்ள தொழுப்பேட்டிலிருந்து 1 கி.மீ. தொலைவிலேயே உள்ளது. தொழுப்பேடு வந்தடைந்தால் அனைத்து ஊர்களுக்கும் பேருந்து வசதியை பெறலாம். எனவே, பெரும்பேர்கண்டிகையிலிருந்து பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

237—

## பேருந்து வசதி

**வினா எண் 2567—திருமதி எஸ். கனிதா சம்பத்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தாம்பரத்திலிருந்து தொழுப்பேடு, அம்மணம்பாக்கம் வழியாக வந்தவாசி வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தாம்பரம், தொழுப்பேடு, அம்மணம்பாக்கம் வழியாக வந்தவாசி வரை பகுதி பகுதியாக போதிய அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் / தனியார் பேருந்துகள் போதிய அளவிற்கு இயக்கப்படுகின்றன.*

238—

## பேருந்து வசதி

வினா எண் 4274—திருமதி ம. சக்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியில் இருந்து புதுத்துறை வழியாக திருநகரி, நெப்பத்தூர், மங்கைமடம் வழியாக பூம்புகார் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிய வழித்தடம் உருவாக்க வாய்ப்பில்லை. தற்பொழுது வழித்தடம் முழுவதும் பகுதி, பகுதியாக இயக்கப்படும் பேருந்து வசதியே போதுமானதாகும்.

239—

## பேருந்து வசதி

வினா எண் 4326—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், களக்காட்டிலிருந்து சேரன்மாதேவி வழியாக திருநெல்வேலிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்படி இடங்களில் தற்போது ஏராளமான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆகையால், கூடுதல் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2012 மே 16]

240—

## பேருந்து வசதி

வினா எண் 4327—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, நெல்லை சந்திப்பிலிருந்து கீழநடியூர், கீழச்சடையமான்குளம், தேவநல்லூர் வழியாக களக்காட்டிற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) களக்காட்டிலிருந்து தேவநல்லூர், கீழச்சடையமான்குளம் வழியாக திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் வரை தொடப் பேருந்து வசதிகள் ஏற்கெனவே உள்ளன. எனவே, புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.*

241—

## கூடுதல் பேருந்து இயக்குதல்

வினா எண் 4328—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, களக்காட்டிலிருந்து கள்ளிகுளம், தட்சிணமாற நாடார் சங்க கல்லூரி வரை கல்லூரி நேரங்களில் கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*